ஸ்ரீ தந்வந்தரயே நம:

# வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல மாதப் பத்திரிகை

பிரமாதீச
ஆனி

ஜூலை
1973




தொகுதி 35
பகுதி 7

Vol. 35
No 7

ஆசிரியர் & பிரசுரகர்த்தா

வைத்ய T. S. ஈச்வரன், L. I. M.

வருஷச் சந்தா
ரு 5/-

| | | |
|---|---|---|
| பருவகால நோய் தடுப்பு | ... | 113 |
| உர : க்ஷதம் | ... | 115 |
| புற்று நோய் | ... | 122 |
| சூடான வென்னீர் – ஆண்மை இழப்பு | ... | 127 |

Annual
Subscription
Rs. 5/-

கார்யாலயம் : 27, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

# வைத்யரத்னம் P. S. வாரியருடைய
# ஆர்ய வைத்தியசாலா
## கோட்டக்கல். (கேரள ராஜ்யம்)

Registered THE ARYA VAIDYA SALA KOTTAKAL Trade Mark.

தலைமை ஆபீஸ் போன்: கோட்டக்கல் எக்ஸ்சேஞ்ஜ்
ஆபீஸ் - அட்மினிஸ்டிரேடர் - மானேஜர் தொடர்புடன் போன் நெ. 31
நர்ஸிங்ஹோம் போன் நெ. 44
தலைமை வைத்யர் போன் நெ. 25
மானேஜிங் டிரஸ்டி (வீடு) போன் நெ. 27
(ஆபீஸ்) போன் நெ 61
மானேஜர் (வீடு) போன் நெ. 26

சென்னை கிளை:

No. 1, கிருஷ்ணமாசாரி ரோடு,
நுங்கம்பாக்கம், சென்னை 34. போன் எண் 811275

மற்ற கிளைகள்:

1. கோழிக்கோடு (போன் 2155)
2. பாலக்காடு (போன் 104)
3. பாலக்காடு ஸேல்ஸ் டிபோ (போன் 584)
4. ஆல்வாய்
5. ஈரோடு (போன் 172)
6. திரூர் (போன் 31)
7. எர்ணாகுளம் (போன் 33026)
8. திருவனந்தபுரம் (போன் 3924)

மேலும் நூற்றுக்கு மேற்பட்ட அதிகாரம் பெற்ற ஏஜண்டுகளும், டெபோக்களும்

சுத்தமானதும, உயர்தரமானதுமான ஆயுர்வேத மருந்துகளும், உயர்ந்த வைத்ய ஆலோசனைகளும் எமது தலைமை ஆபீஸிலும், கிளைகளிலும் கிடைக்கும் எமது தலைமை வைத்யரால் கடிதமூலமாக வைத்ய ஆலோசனைகள் அளிக்கப்படும். நவரைக்கிழி, பிழிச்சல் முதலிய விசேஷ சிகித்ஸைகள் தலைமை வைத்யர் மேற்பார்வையில் எமது கோட்டக்கல் **கோல்டன் ஜூபிலி நர்ஸிங்ஹோமில்** நடத்தப்பெறும்

மற்ற விபரங்களுக்கு:—

மானேஜிங் டிரஸ்டி.
ஆர்ய வைத்யசாலை, கோட்டக்கல்.



ஸ்ரீ தந்வந்தரயே நம:

# வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை

| | | |
|---|---|---|
| தொகுதி 35 | பிரமாதீச ஆனி | பகுதி 7 |
| Vol. 35 | 1973 ஜூலை | No. 7 |


श्री धन्वन्तरये नमः

## பருவகால நோய் தடுப்பு

ஒரு பருவத்திலிருந்து மற்றொரு பருவம் மாறும்போதும், பருவம் மாறவேண்டிய நேரத்தில் மாறாமல் தாமதிக்கும்போதும், நீர், காற்று, உணவுப்பொருள், உடல்நிலை எல்லாவற்றிலும் ஒரு மாறுதலை ஏற்படுத்தும். அதன் காரணமாக நோய்கள் தொத்து நோயாகப் பரவியோ, தனிப்பட்டோ ஏற்படுவதைப் பார்க்கிறோம். இவ்வாண்டில் பருவமழை பெய்வதில் ஏற்பட்ட தாமதமும் மழைப்பருவத்தில் பனி அதிகமாகக் கண்டதன் காரணமாகவும் ஆங்காங்கு வைசூரி போன்ற கொள்ளை நோய்கள் பரவலாகக் காண ஆரம்பித்தன. இந்நோய்கள் பரவுவதைத் தடுக்க அரசாங்கத்தின் சுகாதார அதிகாரிகளும் சுறுசுறுப்பாக அம்மை குத்துதல் போன்ற பணிகளைத் துரிதமாகக் கையாண்டு வருகின்றனர்.

தென்னாட்டில் இவ்வாரம் மழை பெய்துவருகிறது. தாமதித்து வரும் மழையால் ஏற்படும் நோய்கள் – விஷ ஜ்வரங்கள், பிரவாஹிகை, அதிஸாரம் முதலியவை இன்று நாட்டைப் பீடித்து வருகின்றன. இவை பெரும்பாலும் தடுப்பு முறையால் கட்டுப்படுத்த முடியாதவை. நீரிலும் காற்றிலும் வரும் விஷாம்சக் காரணமாக ஏற்படுபவை. அவரவர் தம் தமது நடவடிக்கைகளைச்

சீரமைத்துக்கொண்டும், ஜலத்தைக் காய்ச்சிக் குடிப்பது, உணவில் கட்டுப்பாடு, சீத உபாதிகள் ஏற்படாதவாறு உடலைக் கதகதப்பு குறையாமல் பாதுகாத்துக்கொள்வது போன்ற சில பாதுகாப்புகளைச் செய்துகொண்டுமிருந்தால், நோய்கள் பாதிக்காமலிருக்கக் கூடும்,

வைஸூரி, காலரா போன்றவைகளைத் தடுக்கத் தடுப்பு ஊசிகள் இன்று பெருவாரியாகக் கையாளப்பட்டு வருகின்றன. இவைபற்றி ஸாதகமான அபிப்ராயங்களே அதிகம். வெளி நாட்டில் கூட பாதகமான அபிப்ராயங்களைத் தெரிவிப்பவர் சிலர் தாம். எனவே இவை இன்றைய சூழ்நிலையில் மக்களின் சுகாதாரப் பாதுகாப்பிற்கு இன்றியமையாதவையே எனினும் அவைகளைக் கையாளும் வழியில் உள்ள சில சில்லரைக் குறைகள் தவிர்க்கத் தக்கவை. இவைகளை சுகாதார இலாகாவின் கவனத்திற்குக் கொணர்வது மிக அவசியம்.

இந்தத் தடுப்பு ஊசிகள் தற்காலிகமான பலனைத் தருபவையல்ல. ஓரிரு ஆண்டுகளுக்காவது இவை சக்தியுடனிருக்கும். ஆகவே யுத்த காலத்தில் ஆயுதப் பயிற்சி போன்று, தொத்து நோய்கள் பரவலாகக் கடுமையாக ஏற்பட்ட பின் இந்தத் தடுப்பு ஊசிகளைப் போடுவதைத் தவிர்த்து ஓரிரு மாதங்கள் முன்னரே இவைகளைப் போடலாம் தமிழ் நாட்டைப் பொறுத்தவரை ஆரோக்கியம் அதிகம் கெடாத மாதங்கள் சித்திரை, வைகாசி, ஆவணி, கார்த்திகை, தை மாதங்களே. சித்திரை, ஆவணி, கார்த்திகை என்ற மூன்றையும் சாதாரண மாதங்கள் என ஆயுர் வேதம் குறிப்பிடும் நோய் தடுப்பிற்கான சிகித்ஸையாக முன்னோர்கள் கையாண்டுவந்த சோதன சிகித்ஸை, ரஸாயனங்கள் சாப்பிடுவது முதலியவைகளை இம்மாதங்களில் செய்துகொள்ளச் சொல்கிறது ஆயுர்வேதம். நோய் தடுப்பிற்கான எந்த உபசாரங்களுக்கும் இவை ஏற்ற காலம். காலத்திற் செய்த பணி தான் பயன் தரும். பரவலாக நோய் வியாபித்து வரும்பொழுது செய்யப்படும் தடுப்பு சிகித்ஸையே அந்த நோய் கடுமையுடன் ஆரம்பிக்கக் காரணமாவதையும் அனுபவத்தில் காண்கிறோம், சித்திரை, ஆவணி, கார்த்திகை என நாம் குறிப்பிட்டது பொதுப்படையானது. பருவ மாறுதல் சரியான நேரங்களில் ஏற்படாமல் இவ்வாண்டில் நடந்தது போலத் தாமதித்து நிகழ்ந்தால், அதற்கேற்ப நாமும் நமது திட்டத்தை மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டும் நாட்டிற்கு நாடு, நகரத்திற்கு நகரம் இந்தத் திட்டத்தைச் சூழ்நிலையையொட்டி மாற்றி அமைத்துக் கொள்ளுதல் நல்லது. ஐப்பசி கடைசி வாரத்தில் வைசூரி கடுமையாகப் பரவுமோ என்ற பயம் இருந்தது அந்நிலையில் தடுப்பு ஊசி போடும் பணியைத் தீவிரமாக்கினர் சுகாதார இலாகாவினர். இவ்விதம் செய்வதை விட நிதானமாக திட்டமிட்ட பாதையில் இவைகளைச் செய்வது தான் அழகு. எதிர்பாராத திடீர் தாக்குதலிருப்பினும் கூட யுத்த காலத்தில் ஆயுதப் பயிற்சி செய்வது சரியல்ல.

———

# உர : க்ஷதம்

[ஸ்ரீ, B. வைத்யநாதன், ஆயுர்வேத சிரோமணி, சென்னை]

"உர : க்ஷதம்" என்பது - ஆயுர்வேதத்தில் மூல கிரந்தங்களாக இதுகாறும் பூஜிக்கப்படும் சரக ஸுச்ருத ஸம்ஹிதைகளில் இதன் விவரம் காணப்படுகிறது. இந்த உர : க்ஷதத்தின் ஓரளவு முதிர்ந்த நிலையான "யக்ஷ்மா" என்னும் ரோகத்தில் மந்திர, ஔஷத ரூபமான சிகித்ஸை உலக இலக்கியங்களுக்குள் புராதனமான ருக்வேத ஸம்ஹிதா, சுக்லயஜுஸ்ஸம்ஹிதா, தைத்திரீய ஸம்ஹிதா, ஸாமஸம்ஹிதா, அதர்வஸம்ஹிதா இவைகளில் காணப்படுகிறது. ஆதலால் இது ஒரு பழமையான வியாதியாகும்.

இந்த உர : க்ஷதம் என்பதற்கும், இதுவே புறக்கணிக்கப் பெற்று வளர்ந்து "ராஜயக்ஷ்மா" என கூறப்படும் நிலைக்கும் உள்ள நெருங்கிய தொடர்பால் இரண்டும் ஒன்றுபோல் காணப்படுகிறது. ஆனால் உண்மையில் "உர ; க்ஷதம்" ராஜயக்ஷ்மாவைக் காட்டிலும் வேறுபட்டது என்று நன்கு உணர்த்துவதற்குப் போலும் ஸ்ரீ சரகாசார்யர் "க்ஷதக்ஷீண சிகித்ஸை" என்று சிகித்ஸா ஸ்தானத்தில் தனியொரு அத்யாயத்தை எழுதியிருக்கிறார். உர : க்ஷதத்தின் புறக்கணிப்பால் ஏற்படும் தொடர்ச்சி தான் "யக்ஷ்மா" என்பதை தெளிவுறுத்துகிறார்

சரக ஸம்ஹிதைக்கு உரை தந்துள்ள ஸ்ரீ சக்ரபாணி தத்தரும் மேற்கூறிய க்ஷத நிதானத்தில் உர : க்ஷதம் வேறு "யக்ஷ்மா" வேறு என்று விளக்குகிறார்

பகவான் ஸுச்ருதர் உத்தர தந்திரத்தில் "சோஷப்ரதிஷேதம்" என்னும் அத்யாயத்தில் "அநுலோம" "ப்ரதிலோம" சோஷங்களைக் குறிப்பிட்டு பிறகு "ஒரு சாரார் அபிப்பிராயம்" என்னும் தலைப்பில் எட்டுவிதமான சோஷங்களைக் குறிப்பிட்டு அந்த அபிப்ராயத்தைக் கண்டித்து "தோஷ, தாது, மல, க்ஷய விருத்தி சிகித்ஸா" முறைப்படி உபசரிக்கப்படவேண்டிய தாது க்ஷயம் தான் அவை எனவும், அவைகள் சோஷம் என்னும் பிரிவில் வருவன அல்ல எனவும் ஸித்தாந்தம் செய்கிறார்.

இப்போது எடுத்துக்கொண்டுள்ள "உர க்ஷத"மும் அந்த எட்டில் ஒன்றாகிறது. ஆதலால் "உர:க்ஷதம்" ஸுச்ருதருடைய அபிப்ராயத்திலும் "சோஷம்" என்னும் "யக்ஷ்மா" அல்ல என்று ஆகிறது.

இவ்விதம் விளக்கப்பட்ட உர:க்ஷதத்தின் நிதானங்களாவன:- வில் என்ற ஆயுதத்தை பலாத்காரமாக ச்ரமப்பட்டு வளைத்தல், மிகுந்த பாரத்தைச் சுமத்தல், தன்னைக் காட்டிலும் பலசாலிகளுடன் சண்டை போடுதல், உயரமான இடங்களிலிருந்தும், சமமில்லாத இடங்களிலிருந்தும் விழுதல், ஓடுகின்ற காளை, குதிரை, மற்றும் அடக்கவேண்டிய பிராணிகளைப் பிடித்தல், கல், கட்டை மற்றும் ஆயுதங்களை பலங்கொண்டு வீசி எறிதல், உரக்கப்படித்தல், வேகமாக வெகுதூரம் செல்லுதல், பெரிய ஆறுகளை நீந்திக் கரையேறுதல். குதிரையோடு ஓடுதல், திடீரென்று உயரத்தாவிக் குதித்தல் (சீக்கிரமாகவும்) துரிதமாக நர்த்தனம் செய்தல், மற்றும் குரூரமான காரியங்களால் அடிபடுதல், இரவில் கண் விழிப்பது தேகப்பயிற்சி செய்வது சிற்றின்பத்தைத் அனுபவிப்பது சிரிப்பது பேசுவது இவைகளை தன் சக்திக்கு மீறி செய்வது என்பவை.

''ஸம்பிராப்தி'' என்னும் வியாதி பரவும் விதமும் லக்ஷணமும் ஓரளவு ஆகந்து கோடியைச் சேர்ந்ததுபோல் தோன்றும். இந்த 'உர:க்ஷதத்தில்'' முதலில் ''க்ஷதோஷ்மா'' என்ற அடியினால் உண்டாகும் சூடு பரவுகிறது. பிறகு உரஸ்தானத்தில் அமைந்துள்ள உதானவாயு, ஸாதக பித்தம், அவலம்பக ச்லேஷ்மா என்ற மூன்று தோஷங்களும் சீர்கேடடைகின்றன.

உதானவாயுவின் சீர்கேட்டால் மார்பு வலி, மார்பு பிளந்து போவது போன்ற உணர்ச்சி, இரு விலாப் பக்கங்களில் வலி, வீரமின்மை, பலஹீனம், நிறமாற்றம் இவைகள் உண்டாகின்றன.

புத்தி, மனம் இவைகளை ஆட்சி செய்யும் ஸாதகபித்தத்தின் சீர்கேட்டால் மனோதைன்யம் (ஒன்றிலும் பற்றற்ற மனோபாவம்) சீர்கெட்ட பித்தம் என்னும் ஸ்வபாவத்தில் பசியின்மை ருசியின்மை, ஜ்வரம் இவைகள் உண்டாகின்றன

சரீரத்திற்கு ஊன்றுகோல் போன்றமைந்து ''அவலம்பகம்'' எனப் பெயர் பெற்ற இந்த ச்லேஷ்மாவின் சீர்கேட்டால் சரீரம் வற்றிப்போதல், பலஹீனம், உடல் நடுக்கம், அக்னிமாந்த்யம், வயிற்றுப்போக்கு இவைகள் ஏற்படுகின்றன.

உரஸ்தானத்தில் க்ஷதம் ஏற்பட்டு மேற்கூறிய திரிதோஷ மூர்ச்சனையால் கபம் சீர்கெட்டு பெருமளவில் வாயுவின் அம்சத்தால் உருட்டப்பெற்றும், கருமை கலந்த பழுப்பு வர்ணமுள்ளதாகவும் பித்தத்தின் அம்சத்தால் துர்நாற்றமுள்ள

தாகவும், மஞ்சள் நிறமுள்ளதாகவும், க்ஷதத்தில் நின்று கசியும் ரத்தம் கலந்தும், இருமல் மூலம் வெளிப்படுகிறது க்ஷதம் காரணமாக மார்புவலி விசேஷமாக இருக்கும்.

மேற்கூறிய லக்ஷணங்கள் பூர்வரூபாவஸ்தையில் அரை குறையாக வெளிப்பட்டும், ரூபாவஸ்தையில் வியக்தமாகவும் இருக்கும்.

சிகித்ஸிக்கத் தக்க நிலைகள் :—

ஒரு சில லக்ஷணங்களோடும், ஒரு வருஷ காலத்திற்குள் ஏற்பட்டும், ரோகி அக்னிபலம் குன்றாதவனாகவும், பலசாலியாகவும் இருந்தால் சுகமாக சிகித்ஸிக்கத்தக்கது.

ஒரு வருஷத்திற்கு மேற்பட்டுத் தொடர்ச்சியுள்ளது அதே நிலையில் கடத்தத்தக்கது.

எல்லா லக்ஷணங்களும் ஒருங்கே பொருந்தியிருந்தால் சிகித்ஸிக்கத் தகுந்ததல்ல.

சிகித்ஸா :—

(1) லாக்ஷா சூர்ணம், வாஸாஸ்வரஸம் இவைகளை தேன் நெய் கூட்டி உட்கொண்டு அனுபானமாக அப்பொழுது கறந்த பசுவின் பாலை கல்கண்டு சேர்த்து அருந்தலாம். ஆட்டின் பால் சாலச் சிறந்தது.

(2) தேன்மெழுகை நெய்யில் பொரித்து உட்கொள்ளலாம்.

(3) "இம்பூரல் அறியாதான் இருமிச் செத்தான்" என ஒரு பழமொழி. இந்த இம்பூரல் வேர் பட்டையை அரைத்து அதன் ரஸத்தை எடுத்து பால் சக்கரை சேர்த்துக் காய்ச்சி லேஹ்யமாகச் செய்து சிறிது திரிஸுகந்தம் தூவிக் கலந்து உட்கொள்வதுண்டு.

(4) யுனானி முறையான 'ஸபூபேஹப் ஸுத்தம்" என்ற சூர்ணத்தை தேன் நெய் சேர்த்துக் கொடுக்கலாம்.

(5) "கஹ்ரூபா" என்ற திருணகாந்த மணியின் பஸ்மாவை தேன் நெய் சேர்த்து ஸேவிக்கலாம்.

(6) சந்தனாதிவடி என்ற மாத்திரையை வாயில் அடக்கிக் கொண்டு உமிழ்நீரை சிறிது சிறிதாக விழுங்கிவர குணம் கிடைக்கிறது.

ஸிதோபலாதி சூர்ணம், யஷ்டி சூர்ணம், ஸர்ஜரஸ பஸ்மம், குடுசீஸத்வம் கூஷ்மாண்டாவலேஹம், வாஸா கூஷ்மாண்டம், அமிர்தப்ராசம், சசவாஸாதி கிருதம், சாகலாதி க்ருதம், உசீராஸவம் போன்ற சீதவீர்யம், ஸ்தம்பனம் உரஸ்ஸந்தானம், வ்ரணரோபணம் முதலிய குணங்களை உடைய ஔஷதங்களின் உபயோகம் யாவரும் அறிந்ததே. வலிவையும், ஊட்டத்தையும் அளிக்கவல்லதும், குளிர்ச்சியானதும், விரைவில் ஜீரணிக்கத் தகுந்ததும் ஆன ஆகாரமும், பானமும், பகலில் கண் அயர்தல், ஆயாசமின்மை, சாந்த மனோபாவம் முதலிய ஒழுக்கங்களும் தேவை.

திற்க, நான்குவகை "யக்ஷ்மா," க்ஷதகாஸம், "யக்ஷ்மா" சம்பந்தமான போன்று இதுவரை பார்க்கப்பட்ட உர:க்ஷதம் என்ற 6 நிலைகளில் "உர:க்ஷதம்" காணப்படுகிறது. இவற்றுள் க்ஷதகாஸத்திலும். "ஸாஹஸம்" என்ற சக்திக்கு மீறிய செயலால் ஏற்படும் யக்ஷ்மாவிலும் முதலில் உர:க்ஷதம் ஏற்பட்டு வியாதி தொடங்குவதால் உர:க்ஷதம் முக்யமான காரணமாகிறது. அவ்விதமே யக்ஷ்மா ஸம்பந்த மற்றதுபோல் இதுவரை குறிப்பிடப்பட்ட உர:க்ஷதத்திலும் உர:க்ஷதம் முக்ய காரணமாகிறது. ஸாஹஸத்தைத் தவிர்த்து மற்ற மூன்று காரணங்களால் ஏற்படும் யக்ஷ்மாவிலோ வியாதி ஏற்பட்டு ரூபாவஸ்தையை அடைந்து பதினொன்றில் ஒன்றான காஸத்தால் ஏற்படும் உர:க்ஷதம் உபத்ரவ ரூபமாகிறது.

இங்கு க்ஷதகாஸமும், ஸாஹஸிக யக்ஷ்மாவினால் உண்டாகும் காஸமும் வேறுவேறல்ல. அது போல் க்ஷயகாஸமும் ஸாஹஸமும் நீங்கலாக மற்ற மூன்று காரணங்களால் உண்டான யக்ஷ்மாவின் காஸமும் வேறு வேறல்ல.

இதை சக்ரபாணி தத்தர் சரகஸம்ஹிதையின் உரையில்—காஸப்ரகரணத்தில் விளக்குகிறார். இங்கு மூலத்திலும் அதை ஒட்டி உரையிலும் காணப்படும் 'அதிவ்யவாய" என்னும் சொல்லிற்குப் பதிலாக "அதிவ்யாயாம" என்று இருக்கவேண்டுமென்று தோன்றுகிறது.

திற்க க்ஷதகாஸமும் ஸாஹஸ யக்ஷ்மகாஸமும் ஒன்று என்று காஸப்ரகரணத்தில் உரையில் குறிப்பிட்டுள்ளது போல க்ஷயகாஸமும் ஸாஹஸம் நீங்கலாக மற்ற மூன்று காரணங்களால் உண்டாகும் "யக்ஷ்மா" வின் காஸமும் ஒன்றுதான் என விளக்குகிறார்.

''உர:க்ஷத''த்திற்கு யக்ஷ்மாஸம்பந்தம் உண்டா?யக்ஷ்மா ஸம்பந்தமல்லாமல் உரக்ஷதம் இருக்க முடியுமா என ஸந்தேகம் எழுகிறது

கீழே நாம் ஸ்ரீ சரகாசாரியர் ஸ்ரீஸுச்ருதாசார்யர், ஸ்ரீசக்ர தத்தர் இவர்கள் அபிப்ராயத்தைப் பார்த்தோம். அவர்கள் உர:க்ஷதம் வேறு என்பதையும், அது தாது க்ஷயம் என்ற பிரிவினைச் சேர்ந்தது எனவும் விளக்கியுள்ளார்கள் அதற்கான விவரணங்கள் விசேஷமாக சரகத்தில் கொடுக்கப்பட்டு ஸ்ரீசக்ரபாணி தத்தரால் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

அவைகளாவன :—

(1) உர:க்ஷதம் திரிதோஷத்தால் உண்டாவது.

(2) ஸம்பிராப்தி என்னும் வியாதி பரவும் முறை வேறுபட்டது

(3) லக்ஷணங்கள் வேறுபட்டவை என்பன,

ராஜயக்ஷ்மாவைச் சார்ந்த இந்தக் காரணங்கள் உர: க்ஷதத்தை வேறுபடுத்துகின்றன என்று குறிப்பிடுகிறார்.

உட்புகுந்து பார்த்தால் இந்தக் காரணங்கள் மிகவும் பலவீனமாக இருக்கின்றன.

இப்பொழுது ஒவ்வொன்றின் உட்கருத்தையும் பார்க்கலாம். ராஜயக்ஷ்மா திரிதோஷத்தால் உண்டாவது என்றும் உர:க்ஷதம் அப்படிப்பட்டதல்ல என்றும், ஆதலால் இவை ஒன்றுக்கொன்று வேறுபட்டது, என ''உர:க்ஷதம் த்ரிதோஷத்தினால் உண்டானதே என்ற முதல் காரணம் கூறப்படுகிறது அதைப் பார்ப்போம்.

ஸாஹஸமான காரியங்களால் உர:க்ஷதம் ஏற்பட்டு பிறகு தோஷஸம்மூர்ச்சனை ஏற்படுகிறது ஸாஹஸிக யக்ஷ்மரோகத்தில். உர:க்ஷதத்திலும், அதே சக்திக்கு மீறிய ப்ரயத்னமான ஸாஹஸம் தான்; உர:க்ஷதத்திற்கும் காரணமாகக் கூறப்படுகிறது.

''ஆகந்துர்பாஹ்யஹேதுஜ'' என இரண்டுமே ஓரளவு ஆகந்து கோடியைச் சேர்ந்தது. இரண்டிலும் க்ஷதோஷ்மாவின் ஆக்ரமணம் முதலிலும் பின்பு தோஷஸம் மூர்ச்சனையும் ஏற்படுகிறது. அப்படியிருக்கையில் ஒன்று திரிதோஷஜன்யம் என்றும் மற்றொன்று அவ்விதமல்ல என்பதும் பொருந்தவில்லை.

'' பின்னஸம்ப்ராப்திச்ச '' என்ற ரோகம் பரவும் முறை மாற்றம் என்பது இரண்டாவது காரணமாகக் கூறப்படுகிறது.

ஸாஹஸிக யக்ஷ்மாவில் கூறப்பட்ட எல்லா லக்ஷணங்களும் இந்த உர : க்ஷத ப்ரகரணத்தில் இருக்கின்றன. இதை நாம் அடுத்து மூன்ருவது காரணத்தைச் சித்திக்கும்போது அறியலாம். காரணமில்லாமல் காரியம் வரமுடியாது. அந்தந்த தோஷங்கள் தன் செய்கையைச் செய்தே தீருகின்றன. ஆதலால் காரியத்திலிருந்து அதே ஸம்பிராப்தி முறைதான் அனுமானிக்கப்பட வேண்டியிருக்கிறது மேலும் உர : க்ஷதம் ஏற்பட்ட பின்னரே இரண்டிலும் தோஷ தூஷ்ய ஸம்மூர்ச்சனையைக் காரணமாகக் கொண்ட லக்ஷணங்கள் உண்டாகின்றன என்பதொன்றே இரண்டிற்கு முள்ள வேறுபாட்டை சந்தேகிக்கச் செய்கிறது. ஆகையால் ஸம்பிராப்தி முறை வேறுபட்டது என்பதைக்கொண்டு இவ்விரண்டையும் பிரிக்க முடியாது போலிருக்கிறது. லக்ஷணங்களின் மாறுபாடு என்பது மூன்ருவது காரணமாகக் கொடுக்கப்படுகிறது.

ஊன்றிப் பார்க்குங்கால் இரண்டின் லக்ஷணங்களும் ஒன்ருகவே தோன்றுகின்றன. இவற்றை எல்லாம் யோசித்துத் தான் ஸ்ரீ வாக்படரும் உர : க்ஷதத்திற்கு என்று தனியொரு ப்ரகரணம் ஒதுக்காமல் அதன் நிதான லக்ஷணங்களை ஒருங்கே அமைத்து க்ஷதகாஸ ப்ரகரணத்தில் விவரிக்கிருர். மேற்கூறிய சர்ச்சையில் தன்னை ஈடுபடுத்தவேயில்லை.

இவ்விதம் சிக்கலான விஷயங்களை நன்கு யோசித்து ஒப்பிட்டுப் பார்த்தால் உர : க்ஷதம், உர : க்ஷதக்ஷயம், க்ஷயம் க்ஷத சோஷம் என்பவை படிப்படியே முதிர்ந்த வியாதி நிலைகள் என்பதும், குட்டிப்பாம்பு போன்ற உர : க்ஷதம் சிகித்ஸையின்றி உர : க்ஷத க்ஷயமாகவும், உர : க்ஷத க்ஷயம் சிகித்ஸையின்றி பெரிய பாம்புக்கொப்பான சோஷமாகவும் பரிணமிக்கிறது என்ருகிறது.

நிற்க : ப்ரத்யக்ஷம் ஒன்றையே ப்ரதானமாகக் கொண்ட மேல்நாட்டார் கொள்கைகளில் நமக்கு அபிப்ராயபேதமிருப்பினும் Tuberculosis என்னும் வியாதியில் பல நோயாளிகளிடம் காணப்படும் ஒரேவித லக்ஷணங்களும் ஸம்பிராப்தி ப்ரகாரமும் நமது ராஜயக்ஷ்மாவின் ஸம்பிராப்தி ப்ரகாரம், லக்ஷணங்கள் இவைகளுடன் ஒத்திருக்கின்றன. அவர்களால் அந்த வியாதியில் க்ஷதம் இன்றியமையாத காரணமாகக் கூறப்படுகிறது.

அவர்கள் கூறுவதின் ஸாரமாவது : புப்புஸம் போன்ற இடங்களில் க்ஷயரோக ஜீவாணுக்கள் ஆக்ரமித்து வ்ருத்தி அடை கின்றன. அப்பொழுது அந்த அவயவங்களில் சில மாறுதல்கள் காணப்படுகின்றன. அவைகள் தான் க்ஷயக்ஷதங்கள். பெரும் பாலும் லஸீகா கிரந்திகளையும் லஸீகா நாளங்களையும் பாதிக் கின்றன. பாதிக்கப்பட்ட இடம் சிதைவுண்டு சீர்கேடடைந்து முதலில் பழுப்பு நிறமான தோற்றத்தை அடைகிறது. இது போல் பல க்ஷதங்கள் ஒன்று சேர்ந்து நாளடைவில் அழுகியது போன்ற நிலையை அடைந்து மஞ்சள் நிறமாகின்றன. பின்பு திரவமாகி லஸீகையுடனே ரத்தத்துடனே கலந்து சரீரத்தின் பல அவயவங்களை அடைந்து ஆங்காங்கே க்ஷதத்தை உண்டு பண்ணி வியாதியை வ்ருத்தி செய்கின்றன.

இந்த விஷ ஜுஷ்டமான திரவநிலை, இயற்கையின் தூண்டு தலால் உண்டாகும் நார் போன்ற வஸ்து, ஸுதாஸத்வம் இவை களால் தடுக்கப்பட்டு சிறையிடப்படுகிறது. இயற்கையின் இந்த உதவி மேலோங்கி நின்றால் க்ஷதம் ரோபணத்தை அடைந்து விஷத்ரவத்திற்கும், சரீரத்திற்கும் தொடர்பில்லாமல் போகிறது. க்ஷதம் ஏற்பட்ட இடம் எலும்பாகவும் மாறுவதுண்டு.

இந்த ரோபணவஸ்தை அபத்யாதி காரணங்களால் சிதைவு படலாம். அப்படியாகுமேயானால் க்ஷதம் திரவ நிலைமை அடைந்து விஷதிரவத்தை லஸீகா மூலமோ ரத்தமூலமோ பரப்புகிறது.

இவ்விதம் விளக்கியுள்ள இந்த க்ஷதத்தையும் நம் உர : க்ஷதத்தையும், இரண்டு ஸம்பிராப்தி முறையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் நம் உர : க்ஷதம் யக்ஷ்மாவின் சம்பந்தமுள்ளதாகவே தோன்றுகிறது.

ஆனால் ஸாஹஸிக யக்ஷ்மா, உர : க்ஷதம் இவைகளில் உண்டாகும் முக்ய உர : க்ஷதத்திற்கு மட்டுமே மேற்கூறிய விளக்கம் பொருந்துகிறது. உபத்ரவ ரூபமாக ஏற்படும் உர : க்ஷதங்களுக்கு மேலே கூறிய விளக்கம் பொருந்தாது. அது விஷயம் சற்று சிந்திக்கவேண்டியதே.

# புற்று நோய்

வைத்ய V S பஞ்சநாத சர்மா, திருச்சி

(1972 மே மாதத் தொடர்ச்சி)

பித்தம் பங்கு கப ; பங்கு : பங்கவோ மலதாதவ :
வாயுனு யத்ரநீயநேந்த தத்ர கச்சந்தி மேகவத்

என்பது வாக்படரின் வாக்கு. இந்த வாய்மையானது சூட்சமம், (புலன்களுக்குப் புலப்படாதது) என இருவகையாகப் பிரிக்கப் பட்டுள்ளது இந்த இருவகைகளிலும் சமநிலை ; கேடுறும் நிலை என இருவகை உண்டு சூட்சமமான வாயுதான் நம் உடலில் உள்ள ரசம் ரத்தம் - மாமிசம் - மேதஸ் - எலும்பு - மஜ்ஜை - சுக்லம், ஆகிய ஏழ தாதுக்களின் கோசங்களில் (Cells) அமைந்து உள்ளது. ஒரு நவீன ஆராய்ச்சியாளர் தன் கட்டுரையில் வாயு, பித்தம், கபம் இம் மூன்றும் உடலில் உள்ள கோசங்களில் அமைந்து இருக்கும் விதத்தினையும், அதன் வேலைகளையும், கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

The inter cellular fluid is chemically a roughly 1 percent of solution of salts (Predominately Common Salt) in water, with a trace of Alkali and a temperature of 104°F. It has three basic components (viz). hot water the solvent, cooling salt the solute and an alkali which is balance with the Metabolitic Carbonic acid gas maintains a faint alkaline reaction. The amount of these three basic components of the inter-cellular fluid always remains constant under the physiological condition.

The Tridhatus of Ayurveda are identical with the three material substances namely water salt and alkali comprising the basic Trinity of inter cellular fluid. In their normal proportion they govern the three factors of the physiological function namely activation ; retardation and regulation and in their abnormal proportions the three forms of pathalogical dis function namely over action, under action and irregular action of the vital process of the body. The water component represents the Pitha dhatu and water excess the Pitha dosha, salt component; represents the Kapha dhatu and the salt excess the Kapha dosha ; and reaction component represents the Vatadhatu and reaction change the Vatadosha.

P. D DHAWAN, M.SC ,
Research Scholor
**The Journal of Ayurveda.**

தோஷங்கள் (Cells) ஒவ்வொன்றும் சுருங்கவும், விரியவும் செய்யும். இது கோஷங்களின் உட்புறமுள்ள சூட்சமமான வாயுவின் வேலை. சில தோஷங்கள் உருண்டை வடிவத்திலும், சில முக்கோண வடிவத்திலும் (Triangle) சில நீண்டும் (length wise) இது போல் பல உருவங்களில் உள்ளது). இதற்கும் காரணம் சூட்சமமான வாயுதான். "வாயு: தந்த்ரயந்த்ரதர; ப்ராணோதான ஸமான வ்யானாபானாத்மா; ப்ரவர்த்தக : சேஷ்டானும், உச்சாவசானும் நியந்தாப்ரணேதா சமனஸ; ஸர்வேந்த்ரியாணும் ; உத்யோஜக: ஸர்வேந்திரிநியார்த்தானும் அபிவோடா; ஸர்வசரீரதாது வ்யூஹகர:" என்றிவ்வாறு வாயுவின் இயற்கை நிலையில் செய்யும் வேலைகளையும்; "குபிதஸ்த்து கலுசரீரே சரீரம் நாநாவிதைர்விகாரை: உபதபதி; பலவர்ணசுகாயுஷாம் உபகாதாயமனோவ்யாஹர்ஷயதிஸர்வேந்திரியாண் யுபஹ்ந்தில ச சூ அ 12;ஸ்லோ8)என்று வாயு சீர்கேடு அடைந்தநிலையில் செய்யும் வேலைகளையும் சரகர்விரிவாக உபதேசித்து உள்ளார். ஸர்வ ஸரீர தாது வ்யூக கர : என்று ரசம் முதற்கொண்டு சுக்லம் வரை உள்ள ஏழு தாதுக்களிலுள்ள கோஷங்களில் (Cells) சூட்சம வாயுவை குறிப்பதாகவும், "சர்வ சரீர" என்பதனுல் மனிதன் முதல் தாவர ஜங்கம எல்லாம் பிரிவின் உடல்களையும் குறிப்பிடுவதாகக் கொள்ளலாம். இக்கருத்தின்படி நோயாளிகளின் உடற்நிலை பரிசோதனை செய்ய முற்பட்டால் ஆயுர்வேத முறைப்படி வைத்தியம் செய்ய மிகவும் எளிதாக இருக்கும்.

இந்நோய் ஆயுர்வேத நூல்களில் விவரித்துள்ள க்ரந்தியின் பிரிவினைப்போல் விசேஷயாக சோதம் சம்பந்தப்பட்டதாக காண்பதால் க்ரந்தியின் பிரிவை சேர்ந்ததா அல்லது சோத வகுப்பைச் சேர்ந்ததா என சந்தேஹம்.

சரக சம்ஹிதை ஸுஸ்ருத ஸம்ஹிதை அஷ்டரங்க ஹிருதயம் ஆகிய நூல்களில் சோதம் அதிகம் உள்ள நோய்களின் பிரிவில் க்ரந்தி - அர்புதம் வித்ரதி மூன்றும் காணப்படுகின்றன. சரக ஸம்ஹிதையில் மற்ற க்ரந்தங்களில் உள்ளதுபோல் அவ்வளவு விரிவாக - சொல்லப்படாமல் போனுலும், சுருக்கமாக ச்வயது சிகித்சையில் சோதம் - க்ரந்தி - வித்ரதி அர்புதம் ஆகியவைகளின் நிதானம், சிகிச்சை சொல்லப்பட்டிருக்கிறது.

ரோகாஸ் சோத்ஸேத ஸாமான்யாத்
அதிமாம்ஸா ர்புதாதய : |
விசிஷ்டா நாமரூபாப்யாம்
நிர்தேச்யபா: சோதஸங்க்ரஹே ||

என்றபடி இவைகள் எல்லாவற்றிலும் சோதம் முக்கியமாகக் காணப்படுவதால் சோத சிகித்சையில் கூறி இருக்கிருர் சரகர்.

சோதம் – க்ரந்த – வித்ரதி – அர்புதம் என்ற வரிசையில் – நிதான சிகித்சை சொல்வதிலிருந்து அடுத்தடுத்து வியாதியின் – கடுமையைத் தெரிவிப்பதற்காகவும் இருக்கலாம்.

"மர்மோபகாதக தர்மவத்வம்'' என்ற குணமானது இவை களில் சமானமாகத் தெரிவதிலும் சோத சிகித்சையில் இவ் வியாதிகளை சரகர் குறிப்பிட்டு இருக்கலாம்.

சுச்ருத ஸம்ஹிதையில் – நிதான ஸ்தானம் அத்யாயம் 9-ல் வித்ரதியைப்பற்றியும்; 11-ல் க்ரந்தி – அபசீ – அர்புதம் பற்றியும் அஷ்டாங்க ஹிருதயத்தில் - ப்ரமேஹ நிதானத்திற்குப் பின்பு வித்ரதி நிதானத்தையும், உத்தரஸ்தானத்தில் – அத்யாயம் 30-ல் க்ரந்தி – அர்புதம் ஆகியவைகளையும் விவரித்து இருப்பதைக் காணலாம். அஷ்டாங்க ஹிருதயத்தில் மட்டும் பிரமேஹத்துக்கு அடுத்தபடியாக வித்ரதியை விவரிப்பதற்கு அவைகளின் நிதான சிகித்சைகளின் ஒற்றுமையே காரணம். பிரமேஹ பிடகைகளைப் பற்றிக் கூறுமிடத்து, ''வித்ரதிச்சேதி பிடகா ப்ரமேஹோபே க்ஷயா தச" என்றும், வித்ரதியின் லக்ஷணங்களை சொல்லும்பொழுது ''வித்ரதிர்வக்ஷ்யதே அந்யத்ர'' என்று சொல்லி அடுத்து வித்ரதி யின் நிதானங்களை விவரிக்கிறார் வாக்படர். இதிலிருந்து ப்ரமேஹ பிடகைப் பிரிவைச்சேர்ந்த – வித்ரதியும் ஸ்வதந்திரமாக வரும் வித்ரதியும் ஒன்ருகத் தெரிகிறது. ஆனால், ''வித்ரதேர் லக்ஷணேர்யுக்தா ஞேயா வித்ரதிகாபுன:'' என்ற சுச்ருதர் வாக்யப் படி வித்ரதிக்கும் வித்ரதிகைக்கும் 'ப்ரமேஹ பிடிகை பிரிவைச் சேர்ந்தது வித்ரதிகா) மாறுபாடு தோன்றுகிறது. ''அல்பார்த்தே கண் ப்ரத்யய.'' என்ற வியாகரண சூத்ரப்படி – ''ஸ்வல்பா வித்ரதி: வித்ரதிகா என்று கொள்ளவேண்டும். ஆக - சோதம் அதிகம் உள்ள பிரிவில் - க்ரந்தி - அர்புதம் - வித்ரதி அடங்கிய தாக முடிவாகிறது, புற்று நோய் இவைகளில் எப்பிரிவைச் சேர்ந்தது என ஆராயவேண்டும்.

(1) சோத ஸம்ப்ராப்தியை சொல்லுமிடத்து,

" ரக்தபித்தகபான் வாயுர் துஷ்டோ துஷ்டான் பஹிச்
ஸிரா:, நீத்வா ருத்தகதிஸ் தைர்ஹி குர்யாத்
த்வங்மாம்ஸஸம்ச்ரயம், உத்ஸேதம் ஸம்ஹதம்
சோதம் தம் ஆஹுர் நிசயாதத:

என்றபடி கெடுதல் அடைந்த - வாயு - பித்த - கபம் - வெளிப் புறத்து சிரைகளில் தடங்கல்பட்டு - தோல் - மாம்ஸம் இவை ளில் வீக்கத்தை உண்டாக்குகின்றன.

புற்றுநோயில் மாம்ஸங்களின் உள்புறம் உள்ள ஸிரைகள் சோதங்களில் - கேடுற்ற வாயு - ரத்தம் - கபம். ரக்தம் தடங்கல் பட்டு வீக்கம் உண்டாகிறது சோதத்துக்கும் - புற்றுக்கட்டிக்கும் வீக்கம் ஒன்றுதான் ஒற்றுமையாகத் தெரிகிறதே தவிர கட்டி உடைந்து ரத்தக் கசிவுடன் மாம்ஸம் வளருவது; விரணம் ஆறுமல் நாளுக்கு நாள் எல்லா தாதுக்களேயும் கெடுத்து - வியாபத்தை உண்டாக்குவது போன்ற - குறிகள் - புற்றில் உள்ளது போல் இல்லாமையால் சோதத்தில் புற்றுநோய் அடங்க இடமில்லே.

(2) இரண்டாவதாக க்ரந்தியின் நிதான - சிகிச்சைகளேப் பரர்ப்போம்.

" கபப்ரதானு : குர்வந்தி மேதோமாம்ஸாஸ்ரகா :
மலார :, விருத்தோன்னதம் யம் ச்வயதும்
ஸ க்ரந்தி : க்ரதநாத் ஸ்மிருத !

அத் 29. ஸ்லோ 1) என்ற வாக்படரின் வாக்யப்படி கபம் முக்கியமாகக்கொண்டு க்ரந்தியும், கபக்குறைவால் சோதமும் எனத் தெரிகிறது.

கேடுற்ற வாதம் - ரத்தம் - கபம் மூன்றும் மாம்ஸம் ரத்தம் கபத்துடன் கூடிய மேதஸ்ஸை கெடுத்து வர்த்துலமாயும் - உலர்ந்தும் - முடிச்சுபோலும் வீக்கத்தை உண்டுபண்ணுகிறது. இது க்ரந்தி என்று பெயர்.

வாதாதயோ மாம்ஸம் அஸ்ருக் ப்ரதுஷ்டா
ஸந்தூஷ்ய மேதஸ்ச கபானு வித்தம்
வ்ருத்தோன்னதம் விக்ரதிதம் து சோபம்
குர்வந்த்யதோ க்ரந்திரிதி ப்ரதிஷ்டா :

(ச, நி. அ 11. சு 1)

இதில் தோஷங்கள் வாயு - பித்தம் - கபம் தூஷ்யங்கள் முக்கியமாக - மாம்ஸம் - ரத்தம் மேதஸ். க்ரந்திர்தோஷாஸ்ர மாம்ஸாஸ்தி ஸிரா வ்ரணபவா நவ " அ. ஹி. உத் - அ. 29 சு 2) என்றபடி - வாதஜ - பித்தஜ - கபஜ - ரத்தஜ - மாம்ஸஜ - மேதோஜ - அஸ்திஜ - ஸிராஜ, வ்ரணஜம் என ஒன்பது வகைகளாகப் பிரிக்கப்படுகிறது புற்று நோயிலும் - தோஷ - தூஷ்யங்கள் - சமானமாகத் தென்பட்டாலும்; புற்றுநோயின் லக்ஷணங்கள் பித்தஜக்ரந்தியில் உள்ளதுபோல் மற்ற ஏனைய க்ரந்திகளில் காணவில்லே. பித்தஜ க்ரந்தியிலும் புற்றுநோயின் அஸாத்யமான

கம்பீரமான லக்ஷணங்களைக் காணவில்லை. தோஷைர்துஷ்டே அஸ்ருஜிக்ரந்தி ; பவேந் மூர்ச்சத்ஸு ஜந்துஷு | ஸிரேமாம்ச ஸம்ஸ்ருத்ய ஸஸ்வாப : யித்தலக்ஷண :

அ. ஹி. உத். அ. 29 சு. 5

என்றபடி ரக்தஜ க்ரந்தியாக புற்றுநோய் இருக்கலாமோ வெனில் - அதுவும் இல்லை. புற்று நோய்க்குள்ள ரக்தஸ்ராவம் எரிச்சல் காய்ச்சல் க்ருமிகள் முதலிய லக்ஷணங்கள் தென்பட்டாலும் புற்று நோயில் உள்ள கிருமிகள் அணுதர்சனி மூலமும் காண முடியாததுபோல் இல்லாமல் ரத்தக்கிரந்தியில் உள்ள க்ருமிகளைக் கொண்டு தெரிந்து கொள்ள முடியும்.

பித்தஜ-ரத்தஜ க்ரந்திகளுக்கு சிகித்சை செய்யுமிடத்து "பித்தாச்ரயேபுந: ஜலோகஸேஎ-ஹிம்-ஸர்ய" என்றும் ததாப்ய பக்வம்-சித்வைதம் ஸ்திதே ரக்தே அக்னிஞ தஹேத் | ஸாத்வசேஷம் ஸசேஷோஹி புநராப்யாயதே - துருவம் (அ. ஹி. உ. சுப) என்றபடி—சஸ்த்ர - சிகித்சை; தாஹசிகித்சை, பித்த சமனமாக—சீதமான—லேபங்கள்—முதலியன செய்வதால் புற்று நோய் சமனமாவதாகத் தெரியவில்லை. ஆதலால், புற்று நோய்க்ரந்திப் பிரிவையும் சேர்ந்தது அல்ல என தெரிகிறது.

---


# நியூ லக்ஷ்மீ டிஸ்பென்ஸரி

(நியூ பிருந்தாவனம் சமீபம்)

கீழ ராஜ வீதி, புதுக்கோட்டை.

குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும்
சிறந்த முறையில் வைத்யம்
செய்யப்படும்.

வைத்யர்

N. வைத்யநாதன், R. M. P.

# சூடான வெந்நீர் - ஆண்மை இழப்பு

பஞ்சாப் ஸர்வகலாசாலையில் உயிரியல் பௌதிகப் போசிரியர்கள் இருவர் டாக்டர் சுகதேவ் ராஜ்பவனும் டாக்டர் குலதீப்ஜி கன்னாரும் நடத்திய ஆராய்ச்சியில் அதிகச் சூடான வென்னீரில் ஸ்நானம் செய்வதால் ஆண்களிடம் காணப்பெறும் மாறுதல்களைக் குறிப்பிட்டுள்ளார்கள். நான்கு வாரங்கள் தொடர்ந்து அதிகச் சூடுள்ள வென்னீரில் ஸ்நானம் செய்து வருவதால் ஆண்கள் தங்கள் ஸந்தான உற்பத்தி சக்தியை - ஆண்மையை இழந்து விடுகிறார்கள்.

ஆண்களது பீஜகோசங்கள் 45 ஸெண்டிக்ரேட் அளவுள்ள சூடான நீருடன் இருபது நிமிஷங்கள் அளவில் ஒருமாத காலம் தொடர்பு கொண்டால், விந்துக்களது ஜீவசக்தி அழிந்து விடுகிறது, 200 ஆண் எலிகளைத் தினசரி 15 நிமிஷ நேரம் இவ்வாறு வென்னீரில் சோதித்து இந்த முடிவிற்கு வந்துள்ளனர்.

உடலிலுள்ள தசைகள் அனைத்திற்கும் வலியூட்ட வென்னீரில் ஸ்நானம் செய்வது உதவுகின்றது. உஷ்ணம்புநா அத: காயஸ்ய பரிஷேகோ பலாவஹ: ஆனால் உடலுக்கு இதமான அளவில் சூடேற்றப்பட்ட வென்னீருக்கே வலிவூட்டும் தன்மை உண்டு. அதிக அளவில் சூடு ஏற்றப்பெற்ற வென்னீர் வலிவீக்கம் குறைய ஒத்தடம் கொடுக்கத்தான் ஏற்றது. ஒத்தடம் ஆரோக்கிய நிலையில் தரத்தக்கதல்ல நோய் பலம் குறைந்ததும் நிறுத்தத்தக்கது. தொடர்ந்து கொடுக்கத் தசைகள் வலிவிழந்து, அழற்சியுறக் காரணமாகும். ரத்த ஓட்டம் அளவிற்கு அதிகமாக அந்தத் தசைகளில் வருவதே அழற்சிக்குக் காரணம். எல்லாவிடங்களிலுமே இப்படி அதிகச் சூடுபடுவது இதமல்ல. முக்கியமாக தேவையுள்ளபோது கண் பீஜகோசம் ஹிருதயம் இவைகளில் மிகஸ்வல்பமாகவே கொடுக்கவேண்டும்.

அல்பம் வங்கக்ஷணயோஸ் ஸ்வல்பம் த்ருங்முஷ்கஹ்ருதயே
ந வா;
தேநைவ சோத்தமாங்கஸ்ய பலஹ்ருத் கேசசக்ஷுஷாம்:

கஸ்தூரி, குங்குமப்பூ, மற்றும் இதர
உயர்ந்த மருந்து சரக்குகளுக்கு
நம்பிக்கையான இடம்

**BHALLA BROTHERS (Regd.)**

LUDHIANA (India)

IN THE SERVICE OF AYURVEDA SINCE 1934

SUPPLYING PURE ARTICLES.

ஆங்கிலம் அல்லது ஹிந்தியில் எழுதவும்

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

***K. L. TALWAR & BROS.,***

MUSK MERCHANTS,

P. B. No. 17, LUDHIANA.

விலைப் பட்டியல் கேட்லாக்களுக்கு எழுதவும்.

# திருச்சி ஆயுர்வேதிக் யூனியன்
## பிரைவேட் லிமிடெட்

(ஸ்தாபிதம் 1939)

விற்பனை அண்டு ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்
31-A, சின்னகடைத் தெரு,
திருச்சிராப்பள்ளி-2.
போன் எண் : 4202

---

## சிறந்த ஆயுர்வேத மருந்துகளுக்கு முப்பத்திமூன்று ஆண்டுகளாக பிரஸித்தமான இடம்.

பிரஸவித்த மாதர்கட்கு:

**ஸௌபாக்கிய ரஸாயனம்**

ஜீர்ண சக்தி, ரத்தவிருத்தி அளிக்கும் சிறந்த லேஹியம்.

300 கிராம் பாட்டில் ரூ. 5.

**பயஸ்யா**

தாய்ப்பாலை வளர்க்கும் திவ்ய ரஸாயன லேஹியம்.

300 கிராம் பாட்டில் ரூ. 5-50

— தபால் செலவு தனி —

சாஸ்திரீய ரீதியில் தகுந்த நிபுணர்களின் மேற்பார்வையில்
தயாரிக்கப்பெற்ற
மற்ற எல்லா ஆயுர்வேத மருந்துகளும்
இங்கு கிடைக்கும்.

வைத்தியர்களுக்கும் பொதுமக்களுக்கும்
— மிகவும் நம்பிக்கையான இடம் —

T. S. ஈச்வரன், L.I.M.
மானேஜிங் டைரெக்டர்.

FOR PURE MUSK, KASHMIR SAFFRON,
GOROCHAN & INDIAN CRUDE DRUGS

WRITE TO

**M|s. Kalia Brothers (Regd.)**

**Wholesale Musk & Indian Drugs Merchants,**

JULLUNDUR CITY (PUNJAB)

**Gram: KALIA** Phone: **Office - 3232**
**Resi. - 4343**

---

சுத்தமான கஸ்தூரி, காஷ்மீர் குங்குமப்பூ,
கோரோசனை மற்றும் மருந்து சரக்குகட்கு
அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :

**கலியா பிரதர்ஸ் [ரிஜிஸ்டர்ட்]**

கஸ்தூரி மருந்து சரக்கு மொத்த வியாபாரி,
ஜல்லந்தர் ஸிடி (பஞ்சாப்).

தந்தி : KALIA போன் : ஆபீஸ் - 3232
வீடு - 4343

தந்தி: "அம்ருதம்"  P. B. No. 1382.  போன்: 26006

# தி ஆர்ய வைத்திய பார்மஸி
## (கோயமுத்தூர்) லிமிடெட்

தலைமை ஆபீஸ்: 366, திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18.

THE ARYA VAIDYA PHARMACY (COIMBATORE) LTD
AVP

**உண்மையான ஆயுர்வேத மருந்துகளுக்கும் சிகிச்சைகளுக்கும் சிறந்த இடம்**

— எங்களுடைய கிளைகள்: —

| | | |
|---|---|---|
| 1. | 23-B, பூஸா ரோடு, புது டில்லி-5 | போன்: 585687 |
| 2. | மொய்தீன் பள்ளி ரோடு, கள்ளிக்கோட்டை 1 | ,, 2984 |
| 3. | கௌடியா மடத்தெரு, மதராஸ்-14 | ,, 85752 |
| 4. | வளிஞ்ஞம்பலம், எர்ணுகுளம், கொச்சின்-16 | ,, 32336 |
| 5. | பிள்ளையார் கோயில் ரோடு, கண்ணனூர்-1 | ,, 92 |
| 6 | மார்க்கெட் ரோடு, பாலக்காடு-1 | ,, 195 |
| 7. | கடைவீதி, பொன்னனி | ,, 41 |
| 8. | ரௌண்ட் வெஸ்டு, திருச்சூர்-1. | ,, 738 |
| 9. | கோர்ட் ரோடு, ஆலத்தூர் | ,, 87 |
| 10 | மெயின் ரோடு, கஞ்சிக்கோடு | |
| 11. | ரயில்வே ஜங்ஷனுக்கு எதிரில், கோயமுத்தூர்-18 | 33758 |
| 12. | இந்திரா பில்டிங், கள்ளிக்கோட்டை-2 | ,, 4891 |
| 13. | T. T. 384 K. டெலிச்சேரி ரோடு, கண்ணனூர்-2 | 842 |
| 14. | No. 263, 64. 11 வார்டு, மெயின் ரோடு, எடப்பாள் (பொன்னனி) | 31 |
| 15. | ஹல்வா பஜார் ரோடு, கள்ளிக்கோட்டை-1 | |

பாக்டரி:
கஞ்சிக்கோடு (கேரளா)
(போன்: 2)

நர்ஸிங் ஹோம்:
திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18
(போன்; 22194)

மேலும் விபரங்களுக்கு விண்ணப்பம் செய்க:—

ஆர்ய வைத்தியன் P. V. ராம வாரியார்
பிரதம வைத்தியர் & மானேஜிங் டைரக்டர்.

## வாரியர்

# க்ஷீரபலா 101

ஸர்வாங்க வாதம், பாரிச வாயு முதலிய எல்லாவித மான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப் பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துகள் தசை நார்களில் வலி, வீக்கம், கை கால் வலி முதலிய எல்லாவிதமான நோவுகளையும் நிச்சயமாகக் குணப்படுத்தும், மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல், கண்-காது கோளாறுகள், ஒருத்தலைவலி முதலிய கோளாறுகளையும் குணப்படுத்தும்.

ரத்த அழுத்தம் [பிளட் பிரஷர்] என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கும் வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்துவந்தால் வாத ரோகங்களும் விருத்தாப்பியத்தினால் ஏற்படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்திக் குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

விலை 25 ML. ரூ. 7-00 12 ML. ரூ. 3-75

ஆரிய வைத்தியர் கெ. எஸ். வாரியர் அவர்களின்

**அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,**


**சைனாபஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி-2.**

PHONE : 5441 வீடு போன் : 6074

[1936-ல் நிறுவப்பட்டது].

## இம்ப்காப்ஸ்

## புராதன பாரம்பரியத்துடன் நவீன தொழில் நுட்பமும் இணைந்து நிற்கும் நிறுவனம்.



இம்ப்காப்ஸ் இந்திய மருத்துவர்களின் இணையில்லாத ஒரு கூட்டுறவு நிறுவனம். புராதன நூல்களில் கூறியுள்ள முறைகள், தரங்களை கண்டிப்பான முறையில் பின்பற்றி ஆயுர்வேத, சித்த, யூனானி மருந்துகளை அது தயாரித்து வருகிறது. மருந்துகளை தயாரிக்கும் ஒவ்வொரு கட்டத்திலும் அதிக கடுமையான முறையில் தரப் பரிசோதனை செய்யப்படுகிறது. புராதன மருந்துகளை தயாரிப்பதில் நவீன பாகக்கிங் முறைகளையும் இயந்திரங்களையும் இம்ப்காப்ஸ் பயன்படுத்தி வருகிறது. சுதேச மூலிகைகள் பற்றிய இடைவிடாத ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள இம்ப்காபஸ் புராதன இந்திய மருந்துகள் சம்பந்தமாக ஒரு மறு மலர்ச்சியை உண்டாக்கப் பாடுபடுகிறது.

IMPCOPS

**உண்மையான ஆயுர்வேத, சித்த, யுனானி மருந்துகளுக்கு பெயர் பெற்ற நிறுவனம்**

இம்ப்காப்ஸ் மருந்துகள் எல்லா முக்கிய மருந்து கடைகளிலும் கிடைக்கும்

**இந்தியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாப்ரேடிவ் பார்மஸி அண்ட் ஸ்டோர்ஸ் லிட்.**

அடையார், சென்னை 20.

விற்பனை நிலையங்கள் : 4/86, மவுண்ட் ரோடு, சென்னை-2. போன்: 8652

48, வொத் மாஸி தெரு, மதுரை. போன்: 30875

16, வெஸ்ட்காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை-14.

maa/IMP/961/M TAM

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்டகால பரீக்ஷை அனுபவத்தினால்

கண்டுபிடிக்கப்பட்ட கைகண்ட பலனளிக்கும்

"சக்தி சஞ்ஜீவி"

(REGD.)

குழந்தைகளுடைய ஈரல் குலைகட்டிகளை

எந்நிலையிலும், போக்குவதிலும்,

வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஒளஷதம்

எங்கும் கிடைக்கும்.

★

தயாரிப்பவர் :

சக்தி விலாஸ வைத்தியசாலா

கரூர் (S. Ry.)

Edited and published by Dr. T. S. Iswaran, L.I.M., on behalf of the Tamilnad Ayurveda Mahamandalam at 27, Chinnakadai Street, Tiruchirapalli-2 Printed at Githa Press, Tiruchirapalli-2.